# நவ்ய சாஸ்த்திரா

வேத சாஸ்த்திர தர்மத்தை அனைத்து ஹிந்துக்களுக்கும் கொடுப்போம்
**Email:** navyashastra@shastras.org **Web:** http://www.shastras.org
nVy x;~ 45-206, River Drive South, Jersey City, NJ 07310 Navya Shãstra

To:

பெரியவாள் பூஜ்ய ஸ்ரீ ஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள்
ஸ்ரீ காஞ்சி காமகோடி சமஸ்தானம் பீடாதிபதி
ஸ்ரீமடம் – சமஸ்தானம், நெ. 1, சாலை தெரு
காஞ்சீபுரம், தமிழ் நாடு.

தேதி – 21 மே மாதம், 2003

பொருள் :– ஹிந்து சமுதாயத்தில் தாழ்ந்த நிலையை அடைந்தோருக்கு சமய வழியில் மதிப்பற்ற உதவியளிக்க நல் வழிகாட்டும் பூஜ்யஸ்ரீ பெரியவாளுக்கு எங்கள் மகிழ்ச்சிகளை தெருவித்துக்கொள்கிறோம். எங்கள் தாழ்மையான சில விண்ணப்பங்கள்.

நவ்யசாஸ்த்திரா குழுவினர் சமர்பணம்

ஸ்ரீ காஞ்சி காமகோடி சமஸ்தானம் பீடாதிபதி பூஜ்ய ஸ்ரீ பெரியவாள் பாதார விந்தத்தில் நவ்ய சாஸ்த்ரா குழுவினர் அனேக கோடி நமஸ்காரங்களுடன் ஸ்ரீபெரியவாள் ஆசீர்வாதங்களைத்தேடி மிகதாழ்மையுடன் சமர்பிக்கும் விண்ணப்பம்.

ஹிந்து தர்மத்தைக்கடைபிடிக்கும் ஆஸ்திகர்களால் நிறுவப்பட்டு இந்தியா மற்றும் பலநாடுகளில் செயல்பட்டுவரும் நிருவனம்தான் நவ்யசாஸ்திரா குழு. ஸ்ரீ பரமாத்மாவின் கிருபையால் ஹிந்துதர்மத்தை பழைய அந்தஸ்துக்கு கொண்டு வர முயர்ச்சியுடன் புண்யகாரியத்தில் ஈடுபட்டுள்ளோம். இந்து சமுதாயத்தின் மஹாரதமானது முன்னேருவதற்கு முழுமையாக ஐந்து குதிரைகள் சேர்ந்து செயல்படுவது அவசியம்.

அதை முன்னிட்டு ஹிந்துக்கள் ஜாதி, ஆண், பெண், வித்யாசமில்லாமல் மதத்தின் ஆர்வத்தை முன்னணியில் நிலை நாட்டவுள்ளோம். எந்த எந்த ஹிந்துக்களுக்கு பிரஹ்ம வித்தையை கற்கும் ஊக்கமும் ஆர்வமும் உள்ளதோ அவர்களுக்கு நமது வேதம், ஆகமம், பூஜை உட்பட சகலவித கல்விகற்கும் வழியமைத்து கொடுப்பதே எங்கள்அடிப்படை நோக்கம் . அத்துடன் ஆர்வமுள்ள ஹிந்து அல்லாதோருக்கும் ஹிந்து காவியங்களை கல்வியுடன் ஊட்டி ஹிந்து சமுதாயத்துடன் கலக்கும் வழி கொடுப்பதும் எங்கள் நோக்கமாகும்.

எங்கள் அங்கத்தினர்கள் யாவரும் ஹிந்து தர்மத்திற்கும் ஹிந்து சமுதாயத்திற்கும் பெரும்சேவை செய்துகொண்டுள்ளார்கள். நாங்கள் ஹிந்து சம்மந்தமான அணிகள் கோயில்கள் மூலமாகவும் இன்டர்நெட் வெப் மூலமாகவும் ஹிந்துமத பிரசாரம் செய்துவருகிறோம். எங்களில் சிவாசார்யார்களாகவும் மற்றும் ஹிந்துமத வழிபாடு பூஜை, வேத கோஷங்கள் உள்பட கல்விதரும் நபர்களாகவும் உள்ளோம். எங்கள் அங்கத்தினர்கள் யாவரும் இங்கு நமது ஹிந்து தர்மத்தைப் படித்தும் சர்ச்சை செய்தும் ஜாதிபேத மின்றி வழிபட்டு வருகிறோம் . ஸ்ரீ ஜகத்குரு பெரியவாள் குறிப்பிடும்படியான ஸ்ரீமன்நாராயண சந்ததிகளாய் நாங்கள் இதில் கலந்துகொள்கிறோம். ஸ்ரீ சங்கராசார்ய மடத்தின் ஆசிகளையும் ஒத்துழைப்பையும் நீண்டகால நன்மைக்காகக் கோறுகிறோம்.

இந்த சமர்பணத்தின் மூலக்கோரிக்கை பின்வருமாறு :
முதற்கண் பூஜ்யஸ்ரீ பெரியவாள் ஹரிஜனங்களுக்கு கடந்த தங்கமான ஐம்பது ஆண்டு சேவைகுறித்து பெருமைப்படுகிறோம். காஞ்சி காமகோடி பீடாதிபதி பரம்பரைக்கு எங்கள் பணிவுடைய அஞ்சலிகள்.

பூஜ்யஸ்ரீ பெரியவாள் சமீபத்தில் குமுதம் பத்திரிக்கை மூலமாக சென்னையில் ஹரிஜனங்களுக்கு தந்திருக்கும் செய்தி (http://www.kumudam.com/kumudam/28-04-03/pg24.html) எங்கள் யாவருக்கும் மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. கடந்த பல வருடங்களாக பூஜ்யஸ்ரீ பெரியவாள் ஹரிஜனங்களுக்கு ஹிந்து சமுதாயத் தில் சரி நிகர் அந்தஸ்து கொடுக்கப்படவேண்டும் என்று முன்னணியில் நின்று ஹிந்து தர்மத்தின் பொற்காலமான தங்க சகாப்தம் ஒன்றை நிலை நாட்ட முயற்சி செய்து வருவது குறிப்பிடத் தக்கதாகும். மற்ற தர்மாசாரியார்களும் மடாதிபதிகளும் அதே வழியை கடைபிடிக்க வேண்டுகிறோம். பகவான் ஸ்ரீராமாவதாரத்தில் ஜாதிவித்யாசமின்றி யாவரையும் சகோதரர்களாக பாவிப்பதை பூஜ்யஸ்ரீ பெரியவாள் குறிப்பிட்டிருப்பது எங்கள் யாவரையும் கவர்ந்ததுமின்றி உலகத்திற்கே கண்காட்டியாக உள்ளது. எல்லா ஹிந்துக்களும் ஜாதி வித்யாசமில்லாத ஒரே குடும்பம். இந்த உண்மையை நாங்கள் யாவரும் முழுமனதுடன் வரவேர்க்கிறோம்.

மேன்மையான ஒரு பட்டு ஆடையில் எண்ணை சிந்திவிட்டது போல் ஜாதியை குறை கூறி சிலர் சமுதாயத்தின் அனியாயங்களை செயல் படுத்துவது நம் நிர்மலமான ஹிந்து தர்மத்தை கலங்கப்படுத்துவதாகும். இதுபோன்ற செயல்களை நமது சமுதாயத்தில் சில நபர்கள் இதயத்தில் பலத்த காயங்களை ஏற்ப்படுத்தியுள்ளது. சில ஜாதிகள் மத்தியில்

சச்சரவுகள் உண்டு பண்ணி யிருக்கிறது. சொல்லப்போனால் இதுபோன்ற நிகழ்ச்சிகள் ஹிந்து தர்மத்திற்கே ஒரு கெட்டபெயர் கொடுத்துள்ளன. ஸ்ரீ ராமாயணத்தில் வரும் அணில் போல நம்மில் ஒவ்வொருவரும் ஜாதி ஆண் பெண் வித்யாசமின்றி ஒன்று சேர்ந்து முடிந்தவரையில் சச்சரவுகளை தவிர்க்க முயற்சி செய்து மனஸ்தாபங்களை நிவர்த்திக்க உதவ வேண்டும்.

பிறப்பு ஜாதியை பார்க்காமல் எவருக்கு எல்லா ஆர்வமும் தகுதியும் உள்ளதோஅவரை த்விஜனாக மாற்ற வழி முறைகள் செய்து கொடுப்பது அவசியம் என நாங்கள் நம்புகிறோம். அவர்களுக்கு ஹிந்து தர்ம விதிகளை கற்பித்து தக்க சமயத்தில் பிரஹ்மோபதேசம் செய்து த்விஜ ப்ரஜைகளாக்க வேண்டும். இப்போது புதியதாக ஹிந்து தர்மத்தில் சேர்ந்து கோயிலில் வழிபட வருபவர்களுக்கு நம் மடங்கள், கோயில்களில் புக வசதி கொடுத்து, அவர்களுக்கு எல்லா சம்ஸ்காரங்களும் பெற உதவி செய்ய வேண்டு மென்பது எங்கள் கருத்து.

இந்த நோக்கத்துடன் எங்கள் நவ்யசாஸ்த்ரா குழுவினர்கள் நமது தாழ்தப்பட்ட, ஹரிஜன மற்றும் பொது சமுதாயத்திலிருந்து ஒரு சில இளைஞர்களுக்கும் நம் ஹிந்து மத ஆசாரம் நியமம் முதலியவைகளை கற்பித்து வேத பாடசாலையில் படிக்க அவர்கள் தினசரி பராமரிப்பு, சாப்பாடு மற்றும் முன்னேற்றத்திற்கு ஆகும் சிலவை ஏற்றுக் கொள்ள எங்கள் குழுவினர்கள் தயாராக உள்ளனர். இவர்களோடு சில ஆர்வமிக்க அந்தணர் குடும்பச் சிறுவர்களையும், அவர் குடும்பங்கள் செய்யும் தொண்டுகளை எண்ணி, ஆதரிக்க தயாராக இருக்கிறோம் .

பூஜ்ய ஸ்ரீ பெரியவாள் இந்த மாதிரி பறந்த மனப்பான்மையுடன் சமுதாயத்தில் ஒரு வித்யாசமின்றி முன்நின்று எல்லோரையும் தன் அறவணையில் எடுப்பது பெருமைப்படக் கூடியதாகும். மற்றைய ஹிந்து ஆசாரியார்களுக்கும் மடாதிபதிகளுக்கும் எடுத்துக்காட்டாகவும் இருக்கும். நம் சமுதாயத்தில் தாழ்ந்தோர் பிரஜைகட்கு பெரிய தன்நம்பிக்கை உயர்வும் சம்மானமும் கொடுக்கும்படி அமைகிறது.

வேதங்கள் ஆகமங்கள் யாவையும் எல்லா ஹிந்துக்களுக்கும் ஜாதி, ஆண், பெண் வித்யாசமின்றி கற்க வழிவகுக்க மற்ற பெரும் மடங்களைச் சார்ந்த ஆசாரியார்களும் மடாதிபதிகளும் பூஜ்யஸ்ரீ பெரியவாள் மாதிரி ஆதரவு கொடுக்கும் நிலை அடைய வேண்டுகிறோம். இந்த மார்கம் ஹிந்து சமுதாயத்திற்கு தற்சமயம் மிக மிக அவசியமாகும், கட்டாயமும் கூட என பூர்ணமாக நம்புகிறோம்.

எங்கள் விடாமுயற்சிக்கும் திட நம்பிக்கைக்கும் என்றும் பூஜ்ய ஸ்ரீ பெரியவாளுடைய ஆசிகளும் உதவியும் தேவையாக உள்ளது.
பூஜ்யஸ்ரீ பெரியவாளுக்கு பலவகையான சமய நேர நிர்பந்தங்கள் இருந்த போதிலும் பெரியவாள் அவர் நம்பிக்கைக்குக் பாத்திரமான ஒரு நபரை எங்கள் நவ்யசாஸ்த்திரா குழு சம்பந்தமான காரியங்களுக்கு அவரது பிரதிநிதியாக நியமிக்க தாழ்மை யுடன் கேட்டுக்கொள்கிறோம்.

அனேக கோடி அஞ்சலிகளும் நமஸ்காரங்களுடன் தாழ்மையாக வணங்குகிறோம்.

இப்படிக்கு,

_______________________________

நவ்ய சாஸ்திரா அங்கத்தினர்கள் குழுவினர்கள், பொருப்பாளர்கள்.